Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

"With God all things are possible"

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/31/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு ஊரடங்கு தொடர்பாக

கொரோனா வைரஸால் உருவாகியுள்ள கோவிட்-19 நோய் கடந்த ஒரு வருடத்திற்குமேல் உலக நாடுகளை அச்சுறுத்தி வருகின்றது. கடந்த சில மாதங்களாக கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு இருந்த நிலையில் தற்பொழுது மத்திய மற்றும் மாநில அரசுகள் கோவிட்-19 நோய்த்தொற்றை தடுப்பதற்காக மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு சட்டம் கொண்டுவந்துள்ளது.

இந்நோய் குறித்து நாம் பீதியடையத் தேவையில்லை என்றும், நோய் வராதவாறு நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளை பொறுப்புணர்வோடு மேற்கொள்ளவேண்டும் என்றும் பல்வேறு வழிகளில் நாம் விழிப்புணர்வு பெற்றுள்ளோம்.

கீழ் குறிப்பிடும் விதிமுறைகளை நமது ஆலயங்களில் ஞாயிற்றுகிழமைகளில் கடைபிடிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

1. அரசு ஆணைப்படி அடுத்த அறிவிப்பு வரும்வரை ஞாயிற்றுகிழமைகள் முழு ஊரடங்கு நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஞாயிறு திருப்பலியானது சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டு சனிக்கிழமை நிறைவேற்றப்படும் திருப்பலி ஞாயிற்றுகிழமை திருப்பலியாக அனுசரிக்கப்படும் என்பதையும் இவ்வேளையில் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஞாயிறு கடன்திருநாள் சனிக்கிழமை திருப்பலி காண்பதோடு நிறைவுசெய்யப்படும். இவ்வேளைகளில் அரசு விதிமுறைகளை கடைப்பிடிக்க உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

2. எல்லா ஆலயங்களிலும் ஞாயிற்றுகிழமை திருப்பலி நிறைவேற்ற அருட்தந்தையர்கள் கவனம் செலுத்த வேண்டும்.
3. மறைக்கல்வி குழந்தைகளுக்கான விவிலிய விசுவாச பயிற்சி ஏப்ரல் 25 முதல் மே 9 வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நற்செய்தி நிலையம் முன்னறிவித்தபடியே இதை நடத்தலாம். குழந்தைகளுக்கு பாதுகாப்பான முககவசமும், கை சுத்தம் செய்ய தேவையான சானிடைசர், சமூக இடைவெளி ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.
4. சளி, காய்ச்சல், இருமல் போன்ற பாதிப்பு உள்ளவர்கள் ஆலயத்திற்கு வருவதைத் தவிர்ப்பது நன்று. வெளி ஊர்களிலிருந்து வருகின்ற நபர்களை பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்ள வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
5. வருகின்ற ஏப்ரல் 25ம் தேதி நடத்த இருந்த இறைஅழைத்தல் ஞாயிறு கொண்டாடத்தை வருகின்ற சனிக்கிழமை திருப்பலியின் போது கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
6. பாப்புலர் மிஷன் தியானம் மற்றும் மறைக்கல்வி ஆசிரியருகளுக்கான பிலோ காலியா தியானமும் மாற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.
7. ஏப்ரல் மாதம் 24 ம் தேதி நடைபெறுகின்ற குருக்கள் கூட்டமும், இளையோர் போட்டியும், அவ்வாறே மே 1 ம் தேதி நடைபெற இருக்கின்ற அருட்பணிப்பேரவையும் முறைப்படி நடைபெறும்.

இவ்வேளையில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரும் குணமளிக்கும் இறைவல்லமையால் விரைவில் குணமடைய நாம் நம்பிக்கையோடு வேண்டுவோம். தேவையற்ற அச்சத்தை விடுத்து, இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டு, நாமும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளை பொறுப்புடன் இணைந்து செயல்படுத்த உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
19.04.2021

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✝ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடல் அனைவரும் அறிய ஆவன செய்ய வேண்டும்.